

தேனி வடக்கு மாவட்டம் தேனி தேர்தல் அலுவலகத்தில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் முன்னிலையில் அ.தி.மு.க. முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் வெங்கடசாமி கழகத்தில் இணைந்தார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.கணேசன். பிசி பட்டி பேரூராட்சி தலைவர் வழக்கறிஞர் மிதின் சக்கரவர்த்தி உடன் இருந்தனர்



சட்டப்பேரவை தலைவரும் இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளருமான மு.அப்பாவு அவர்கள் இராதாபுரம் தொகுதிக்கு உட்பட்ட உவரியில் கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.நிகழ்வில் மாவட்ட ஊராட்சி மன்ற தலைவரும் தொகுதி பார்வையாளருமான ஜெகதீஸ், மாவட்ட பொறுப்பு குழு உறுப்பினர் நம்பி,ஒன்றிய பொறுப்பாளர்கள் அலெக்ஸ் அப்பாவு,எரிக்ஜுடு, உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர் நடிகர் கருணாஸ் சிவகங்கை நகரில் 26வது வார்டில் பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார். உடன் சிவகங்கை நகர் கழக செயலாளர் சி.எம்.துரை.ஆனந்த் கல்லல் கே ஆர்.அசோகன் மாவட்ட கழக செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான் உட்பட நிர்வாகிகள் சென்றார்கள்.

### இன்று (10ம் தேதி) மானகிரியில்

# சிவகங்கை மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!



சிவகங்கை, ஏப்.,10-

இன்று (பத்தாம் தேதி) சிவகங்கை மாவட்ட கழக அவசர செயற்குழு கூட்டம் மானகிரியில் நடைபெறுகிறது. இதுகுறித்து சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியதாவது.

இன்று (10தேதி) சிவ கங்கை மாவட்ட கழக அவசர செயற்குழு கூட்டம் கல்லல் அருகே உள்ள மானகிரி திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ. கணேசன் தலைமையில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் நாளை (11ஆம் தேதி-சனிக் கிழமை) மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தலைவர், கழக தலைவர்,முதல்வர் தளபதி அவர்கள் சிவகங்கை மாவட்டத்தில் நான்கு சட்டமன்றத் தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பங்கேற்பது குறித்தும் நான்கு சட்டமன்ற தொகுதியில் நடைபெறும் தேர்தல் பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட உள்ளது.

எனவே அனைத்து மாவட்ட கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் சார்பணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இத்தகவலை மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.



தென்காசி சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் டாக்டர்.கலை கதிரவன் தென்காசி தொகுதிக்கு உட்பட்ட குற்றாலம் பேரூராட்சி பகுதியில் பேரூர் செயலாளர் குட்டி தலைமையில் தெருத்,தெருவாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.அப்போது வேட்பாளர் டாக்டர் கலை கதிரவன் குற்றாலம் தெற்கு மலையில் அணைக்கட்டி குற்றால அருவிகளில் வருடம் முழுவதும் தண்ணீர் விழுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என்று கூறினார்.இந்நிகழ்வில் வயதான மூதாட்டி ஒருவர் வேட்பாளர் கலைகதிரவனை கொஞ்சி மகிழ்ந்தார். நிகழ்வில் முன்னாள் ஒன்றிய செயலாளர் ராமையா,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கிருஷ்ணராஜா,ஆசிரியர் பழனி,வனராஜன்,மாரியப்பன்,கருணாநிதி, தொண்டரணி சுரேஷ்,அறங்காவலர் ஸ்ரீதர் ஒன்றிய கவுன்சிலர் மல்லிகா, ஆவின் முருகன் உட்பட கழகத்தினர் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளராகப் போட்டியிடும் திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமாரை ஆதரித்து திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் மரியநாதபுரத்தில் பிரச்சாரம் செய்தார்.



விருதுநகர் மாவட்டம் திருச்சுழி தொகுதி, திருச்சுழி வடக்கு ஒன்றியம் எர்ரம்பட்டி, பி.எம்.புதுப்பட்டி, பண்ணை மூன்றடைப்பு, பி.தொட்டியான்குளம், மணவராயனேந்தல், வடபாலை, புலிக்குறிச்சி, மூலக்கரைப்பட்டி, கேத்தநாயக்கன்பட்டி, சென்னிலைக்குடி, உடையனாம்பட்டி, நொச்சிகுளம், மேலுடைகுளம், கடம்பன்குளம், குச்சம்பட்டி புதூர், உடையனேந்தல் மற்றும் கிருஷ்ணாபுரம் ஆகிய பகுதிகளில் தி.மு.க. வேட்பாளர் தங்கம் தென்னரசு வாக்கு சேகரித்தார்.

### இதுவரை ரூ.6 கோடியே 45 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

**2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்**

**2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!**

## கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 45 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 09-04-2026** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | ஏ.ஆர்.மாரிமுத்து, இலுப்பக்கோரை, கணபதி அக்ரஹாரம் அஞ்சல், தஞ்சை | 25,000/–– |
| 2. | ப.மாரிமுத்து, காளிபாளையம், தாராபுரம், திருப்பூர் – 638 661. | 25,000/– |
| 3. | கே.பிச்சைமணி, 11வது வார்டு, ஜக்கன் தெரு, அல்லிநகரம், தேனி மாவட்டம் | 25,000/– |
| 4. | எம்.ஜார்ஜ், அம்மாபட்டி, கொடைரோடு, நிலக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம் | 25,000/– |
| 5. | வி.ஆறுமுகம், கோவிலன்சாத்தான், மல்லல் அஞ்சல், இராமநாதபுரம் | 25,000/– |
| 6. | ஏ.ஆயிஷாகனி, பூலாங்கால் திருச்சுழி, அருப்புக்கோட்டை, விருதுநகர் | 25,000/– |
| 7. | சா.தங்கசாமி, கோட்டை தெரு, சுரண்டை, தென்காசி மாவட்டம். | 25,000/– |
| 8. | ஜெ. கலைச்செல்வி, வாகையூர் அஞ்சல், திட்டக்குடி, கடலூர் | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |